**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**

SC.No.56/2025

நாள். 12.02.2026

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 12.02.2026ம் நாளாகிய இன்று திருமதி.சித்ரா, கண்காணிப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சாட்சி: | :.அ.சா.4 | ஜாதி | :----------- |
| பெயர் | சிவா | தொழில் | : |
| த/பெ. | : | மதம் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

**(Accused present)**

**முதல் விசாரணை:-**

1. நான் தாரமங்கலத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். எனது அண்ணன் ராமுவின் மகளை காதலித்து திருமணம் செய்து கொண்டார். அதனால் எங்களுக்கும், எனது அண்ணியின் குடும்பத்திற்கும் பிரச்சனை ஏற்பட்டது. அதுசம்பந்தமான பிரச்சனையின் காரணமாக போலீசார் என்னிடம் வெள்ளை தாளில் கையெழுத்து வாங்கி கொண்டார்கள். அந்த பார்வை மகசரில் உள்ள கையெழுத்து **அ.சா.ஆ.4** மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து **அ.சா.ஆ.5.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிக்கப்பட்டதன்பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** கடந்த 18.03.2016ம் தேதி காலை 8 மணிக்கு எதிரிகள் அனைவரும் என் வீட்டிற்கு வந்து என் தாயாரைப் பார்த்து கண்டாரஓழி தேவடியா ஊர் மேய போனவளே என்று திட்டியதாக என் அம்மா என்னிடம் சொன்னார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் இல்லை. மேலும் எதிரி ராமு என் மகள் கனிமொழியை காணவில்லை என்றும், உன் மகன் தான் கூட்டிக்கொண்டு போய்விட்டான் என்று திட்டியதாகவும் மற்றும் எதிரிகள் என் அண்ணனை வீட்டை விட்டு வெளியே வரச்சொல்லி மிரட்டியதாக என் அம்மா என்னிடம் சொன்னதாக போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் இல்லை.

2. மேலும், எதிரிகள் சத்தியமூர்த்தி, குழந்தைவேல் ஆகியோர் என் அம்மாவை கெட்ட வார்த்தையால் திட்டியும், எதிரிகள் சத்தியமூர்த்தி, குழந்தைவேல் ஆகியோர் என் அம்மாவை நகர விடாமல் பிடித்து கொண்டார்கள் என்றும், எதிரி அருணாச்சலம் என் வீட்டிற்கு வெளியே இருந்த விறகு கட்டையை எடுத்து வந்து என் அம்மாவை வலது முழங்கால், இடது மணிக்கட்டு, இடது இடுப்பு ஆகிய இடங்களில் அடித்தும், மற்றும் எதிரிகள் வினோத்குமார், செந்தில்குமார், குழந்தைவேல், ஆகியோர்கள் சிமெண்ட் அட்டையால் என் அப்பாவை அடித்தும், அதே சிமெண்ட் கட்டையால் என் வீட்டின் கதவு, சன்னலை உடைத்தார்கள் என்றும், எதிரி ராமு மின்சார ஒயரை அறுத்து சேதப்படுத்தினார் என்றும் மற்றும் எதிரிகள் ராமு, அருணாச்சலம், சத்தியமூர்த்தி, வினோத்குமார், செந்தில்குமார் ஆகியோர்கள் என் அம்மாவை விடமாட்டோம் உன் சாவு என் கையில் தான் என்று மிரட்டினார்கள் என்றும், எதிரி குழந்தைவேல் கையில் இருந்த விறகு கட்டை எடுத்து சென்றுவிட்டார்என்றும் மேற்படி சம்பவம் குறித்து எனது அம்மா போன் மூலம் தகவல் சொன்னதாக போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

3. எனது தாத்தா கிருஷ்ணனும், என் பாட்டி ரத்தினம்மாளும், மேற்படி சம்பவத்தை பார்த்து பயந்து கொண்டு ஓடி ஒழிந்து கொண்டதாகவும், எதிரிகள் எங்கள் வீட்டையும் உடைத்து ரூ.50,000/- மதிப்புள்ள பொருட்களை உடைத்து

சேதப்படுத்தியதாக என் அம்மா கொடுத்த புகாரின்பேரில் கடந்த 20.03.2016ம் தேதி இரவு 7.15 மணிக்கு போலீசார் என் வீட்டிற்கு வந்து லைட் வெளிச்சம் ஏற்பாடு செய்து என்னையும் என் தகப்பனாரையும் சாட்சியாக வைத்து சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், என் அப்பாவும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம் என்றும் மற்றும் அன்று இரவு 7.45 மணிக்கு எங்கள் முன்னிலையில் உடைந்த சிமெண்ட் அட்டை துண்டுகள் இரண்டையும், அரை செங்கல் இரண்டையும், உடைந்த சன்னல் கண்ணாடி துண்டுகள் மூன்றையும், கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், அதிலும் சாட்சி கையொப்பம் செய்தோம் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

மேற்கண்ட சம்பவங்களை போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது நானும், எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டதால் எதிரிகளை வழக்கில் இருந்து காப்பற்றவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தர்ப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**

சாட்சி சொன்ன சங்கதிகள் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன் கையொப்பம் இடப்பட்டது.

(ஒப்பம்/–த.மாலதி),
உதவி அமர்வு நீதிபதி,
ஓமலூர்.